# வேதநாயகம் சாஸ்திரியார்

மேலை நாட்டு இசை முறையைத் தவிர்த்து நம் நாட்டின் பண்பிற்கேற்ப இராகம், தாளங்களைப் பயன்படுத்தி எழுதிய கிறித்தவ கவிஞர்களுள் முதன்மையானவர் தஞ்சை வேதநாயகம் சாஸ்திரியாவார்.

தஞ்சை வேதநாயகம் சாஸ்திரியார் 1774-1864, கவிஞர் மற்றும் இரண்டாம் சர்போஜியின் பிரதான புலவராவார். இவர் 133 புத்தகங்களும், 400க்கும் மேல்பட்ட பாடல்களையும் இயற்றியுள்ளார்.

**வாழ்க்கை வரலாறு.**

இவர் 1774ஆம் ஆண்டு செப்டம்பர் 7ஆம் தேதி கத்தோலிக்க குடும்பத்தில் பிறந்தார். இவர் போதனார் தேவசகாயம் (முன்னால் அருணாச்சலம்) மற்றும் ஞான பூவின் முதலாம் மகனாவார். சூசையம்மாள் மற்றும் பாக்கியம்மாள் இருவரும் இவரின் சகோதரி ஆவார். இவர்கள் தங்கள் தாயை சிறுவயதிலேயே இழந்தனர்.

புதிய ஏற்பாட்டின் போதகத்தை அறிந்து, கிறிஸ்டியன் ஃப்ரீட்ரெய்க் சுவார்ச்சு என்ற ஒரு ஜெர்மன் நாட்டு ஊழியக்காரரை தேடி, 12 வயதில் சீர்திருத்த திருச்சபைக்கு மாறினார். சுவார்ச்சு ஐயர் கீழ் கல்வி பெற்றார். இவரது கல்வி அந்நாளில் குரு மற்றம் சிஷியன் என்ற வழக்கில் இயக்கப்பட்டது.

பின்னர் தரங்கம்பாடியில் தனது வேதவியல் பட்டத்தை முடித்தார். தனது பேராசிரியரான டாக்டர் ஜான், டாக்டர் கேமரர் மற்றும் டாக்டர் ராமலர் முதலானோர் நன்கு கற்பித்தனர்.

19 வயதில் தஞ்சையை சுற்றி உள்ள ஊர்களின் சுவிசேஷ பள்ளியாசிரியராக இலக்கியம், கணிதம் மற்றும் பல ஒழுங்குகளை கற்பித்தார். பின்னர் தலைமையாசிரியராக பணியாற்றினார்.

இவரின் இறை நம்பிக்கை மற்றோரை மாற்றும் ஆற்றலாக திகழ்ந்தது அந்நாளில் கடுஞ்சிறுவனான தரங்கம்பாடியில் சாமுவேலன் மேலும் சரஸ்வதி மகால் நூலகத்தில் பணிபுரிந்த சாமுவேலின் அய்யனிடம் கடும் விவாதத்தின் பின்னர் கிறித்தவத்திற்கு மதமாற்றினார்.

அளிக்கப்பட்ட பட்டங்கள்.

- வேத சிரோன் மணி.
- ஞான கவிச்சக்ரவர்த்தி
- ஞான தீப கவிராயர்
- வேத சாஸ்திரிகள்
- சுவிசேஷ கவிராயர்

**கீர்த்தனைப் பாடல்கள்**

வேதநாயகம் சாஸ்திரியார் கிறிஸ்தவ கீர்த்தனைப் பாடல்களை பாடியுள்ளார். இவை பல்வேறு ராகங்களிலும், தாளங்களிலும் அமைந்த சிறந்த பாடல்கள் ஆகும்.

மொத்தம் 57 கீர்த்தனை பாடல்களை பல்வேறு ராகங்களிலும், தாளங்களிலும் பாடியுள்ளார். அவர் எழுதிய பாடல்களில் சங்கராபரணம், துசாவந்தி, ரீதிகௌள, காம்போதி, செஞ்சுருட்டி, ஆனந்த பைரவி, காபி, சகானா, நீலாம்புரி, உசேனி, நாதநாமகிரியை, கரஹரப்பிரியா, எதுகாம்போதி, ஹரிகாம்போதி, சக்ரவாகம், சேனாவதி, பைரவி, முகாரி, மாஞ்சி, மோகனம், சைந்தவி, தோடி, யமுனா கல்யாணி, துஜாவந்தி, புன்னாகவராளி, பியாகனம், மணிரங்கு, கோதாரகௌளனம் போன்ற ராகங்களிலும், ஆதிதாளம், ரூபகதாளம், திஸ்ரஏகதாளம், சாபுதாளம், ஏகதாளம் போன்ற தாளங்களிலும் பாடியுள்ளார்.

**தரிசனம்**

வேதநாயகம் சாஸ்திரியார் அவருடைய ஐந்து வயதிலேயே சிலுவைக் காட்சியை கண்ணெதிரே திட்டமும், தெளிவாய் கண்டுள்ளார். அந்த சிலுவை ஓர் ஆள் உயரத்தில் காட்சியளித்தது. ½ நாளிகை (12 நிமிடம்) வரை அக்காட்சியைக் கண்டார்.

தேவன் செய்த நன்மைகளையும், அற்புதங்களையும் தியானிக்கும் போது அவரை காண வேண்டும் என்ற உணர்வு ஒவ்வொருவருக்கும் தோன்றும், இதை வெளிப்படுத்தும் வகையில் அவர் கீர்த்தனையில் 72-ஆம் பாடலை பாடியுள்ளார்.